# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 773/2016/பேரூராட்சி -2

ஆணை எண்: 205/2016

நாள்: 26/12/2016

திரு. அ. சேர்மராஜ்,
18-B, பிள்ளையார் கோயில் தெரு,
ஆலங்குளம் - 627 851.
திருநெல்வேலி மாவட்டம். – மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆலங்குளம் பேரூராட்சி,
ஆலங்குளம் - 627 851.
திருநெல்வேலி மாவட்டம். – எதிர் மனுதாரர்

## ஆணை:

திரு. அ. சேர்மராஜ், ஆலங்குளம் பேரூராட்சி, திருநெல்வேலி மாவட்டம், என்பவரிடமிருந்து வரப்பெற்ற 30.07.2016 நாளிட்ட முறையீடு, 2015-ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகள், விதி-4ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு உரிய படிவத்திலும், விதி 6-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு கட்டணம் ரூ.10/- (பத்து மட்டும்) மதிப்பிலான நீதிமன்ற கட்டண வில்லை (Court Fee Stamp) ஒட்டியும் தாக்கல் செய்யப்படவில்லை.

எனவே, மேற்படி விதிகளில், விதி 8ன் படி குறைபாடுள்ள முறையீடாக கருதி மனுதாரரது அசல் மனு திருப்பி அனுப்பி வைக்கப்படுகிறது. இருப்பினும் முறையீட்டினை குறை நிவர்த்தி செய்திட ஏதுவாக உரிய படிவத்தின் நகல் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு விதிகளின்படி மனுதாரரது முறையீடு தாக்கல் செய்யப்படும் நேர்வில் மேற்படி விதிகளில், விதி 4-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட புதிய முறையீடாக கருதி, உரிய விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2016-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ஆம் நாளன்று கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

இணைப்பு : 1. அசல் மனு
2. படிவ நகல்

பெறுநர்
திரு. அ. சேர்மராஜ்,
18-B, பிள்ளையார் கோயில் தெரு,
ஆலங்குளம் - 627 851.
திருநெல்வேலி மாவட்டம்.